DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 212/2019**

**Deposition of LW7 examined as PW7** Dt. 24.03.2026

| | |
|---|---|
| Name | முருகன் |
| Father's Name | சாமிநாதன் |
| Village | பாலையூர் |
| Taluk | குத்தாலம் |
| Age | 48/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 24.03.2026

(A1, A2 absent. U/s. 355 of BNSS petition filed and allowed)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 18.07.2019 ம் ஆண்டு மாலை சுமார் 4 மணி இருக்கும். நானும், எனது நண்பர் அ.சா.6 வாய்மைராஜாவும் பேசிக்கொண்டிருந்த போது போலீசார் அழைப்பின் பேரில் பாலையூர் காவல்நிலையம் சென்றோம். அங்கு 2 பேட்டரிகள் கொஞ்சம் வயர் 2 பெண்கள் இருந்தார்கள். அப்பெண்களிடம் மேற்படி பொருட்களை ஒப்படைத்தது தொடர்பாக விசாரணை செய்து அதில் என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2-வது கையொப்பம் என்னுடையது தான். **அது அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் நிலையத்தில் வைத்து மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள்.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

எனது நண்பர் அ.சா.6 வாய்மைராஜா காவல் நிலையம் அடிக்கடி செல்லும் பழக்கம் உடையவரா என்றால் சரிதான். காவல் நிலையத்தினர் அழைத்ததின் பேரில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த பெண்களின் விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

**மறுவிசாரணை இல்லை.**

ச. முருகன்

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

24/3/26

நீதித்துறை நடுவர் எண்-II

மயிலாடுதுறை